FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை (Under Section 154 Cr.P.C.) (குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129873

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and AntiCorruption Thoothukudi** Year: ஆண்டு **2025** FIR No.: மு.த.அ. எண் **04/2025** Date: நாள் **08.05.2025**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு **On 07.05.2025 Before 12.00 hrs** Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **08.05.2025** Time : நேரம் **11.30 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **08.05.2025** Time நேரம் **11.45 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **O/o the A.E.E., (Rural Development) and Pachayat Raj), Thoothukudi @ Pudukottai, About 4 Kms West**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **திரு.ஆ.வானமாமலை** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **ஆறுமுகம்**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) National நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் **ஆய்வுக்குழு ஆய்வாளர்** (g) Address : முகவரி **தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்கள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருநெல்வேலி.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.P.Karthikeyan, aged 51/2025, S/o Tr.A.Packianathan, Assistant Executive Engineer, Rural Development and Panchayat Raj, Thoothukudi Sub-Division @ Pudukottai, Thoothukudi District and one another.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் / தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ---

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ---

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8.5.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

8.5.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 08.05.2025 at 13.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.PETER PAUL DURAI
Rank: நிலை ..... No. எண்

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.04/2025

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tr.P.Karthikeyan, aged 51/2025, S/o A.Packianathan,, Assistant Executive Engineer, Rural Development and Panchayat Raj, Thoothukudi Sub-Division @ Pudukottai, Thoothukudi District. **Private individual :** 2. Tmt.K.Sathiya, aged 39/2025 W/o Tr.Kannathasan, No.3/307, Indira Nagar, Pudukottai, Thoothukudi.	தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டையில் உள்ள தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் அவர்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ள 3 ஒன்றியங்களில்

(விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் மற்றும் தூத்துக்குடி) உள்ள ஊராட்சிகளில் நடைபெறும்பணிகளுக்கு அவற்றை செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் கமிஷன் மற்றும் பட்டியல் ஒப்புதல் அளிப்பதற்கு லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 07.05.2025 ஆம் தேதி நண்பகல் 12.00 மணி முதல் 15.00 மணி வரை திரு.ஆ.வானமாமலை, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்கள், (இ) திருநெல்வேலி. அவர்களுடன் தூத்துக்குடி தூத்துக்குடி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ஆ.வானமாமலை அவர்கள் கொடுத்த புகார் மனுவை 08.05.2025-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 11.30 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2025, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், ஆ.வானமாமலை, வயது 57/2025, த/பெ ஆறுமுகம், ஆய்வுக்குழு ஆய்வாளர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்

அலுவலகம், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் :- தூத்துக்குடி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டையில் உள்ள தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் அவர்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ள 3 ஒன்றியங்களில் (விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் மற்றும் தூத்துக்குடி) உள்ள ஊராட்சிகளில் நடைபெறும் பணிகளுக்கு அவற்றை செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் கமிஷன் மற்றும் பட்டியல் ஒப்புதல் அளிப்பதற்கு லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தூத்துக்குடி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், பெண் காவல் ஆய்வாளர் திருமதி.அன்னலெட்சுமி மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் கிளம்பி நேற்று (07.05.2025-ம் தேதி) நண்பகல் 12.00 மணி வரை மேற்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலக பணியாளர்களது நடவடிக்கைகளை இரகசியமாக கண்காணித்ததில் கிடைத்த ரகசிய தகவலின்படி தூத்துக்குடி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் ஆக பணிபுரியும் திரு.கார்த்திகேயன் என்பவர் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 07.05.2025-ம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு தூத்துக்குடி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்குள் சென்று திடீர் தணிக்கை செய்த போது உதவி செயற்பொறியாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள் காலையில் அலுவலகத்திற்கு வந்து வருகைப் பதிவேட்டில் கையொப்பம் செய்து விட்டு விளாத்திகுளத்திற்கு களப்பணி சென்றிருப்பதாக அவரது அலுவலக பணியாளரான உதவி பொறியாளர் திரு.கார்த்திக் மற்றும் அந்த அலுவலகத்திற்குள் இருந்த பெண் திருமதி.சத்தியா என்பவரும் தெரிவித்ததின் பேரில் அவருக்கு தகவல் சொல்லி வரச்சொல்லிவிட்டு உதவி செயற்பொறியாளரது இருக்கை மற்றும் மேஜையினை ஆய்வு செய்த

போது அவரது மேஜை .வலது பக்க டிராயரினுள் உதவி செயற்பொறியாளர், தூத்துக்குடி உபகோட்டம் என்று எழுதப்பட்ட ஒரு காக்கி நிற கவரினுள் இருந்த பணம் ரூ.15,000/- குறித்து உதவி செயற்பொறியாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள் அலுவலகம் வந்த பின் உரிய விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருந்ததால் அந்தப் பணம் ரூ.15,000/-, மற்றும் காக்கி நிற கவர் ஒரு எண்ணமும், அந்த அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளரது ஏற்பாட்டில் கணினி உதவியாளராக (தனிநபர்) பணிபுரிந்து வரும் திருமதி.சத்தியா என்பவரது கைப்பையினுள் ராஜாராம் டெக்ஸ்டைல்ஸ், 20, மதுரை ரோடு, விளாத்திகுளம் என்று தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்களில் அச்சிடப்பட்ட மஞ்சள் நிற பிளாஸ்டிக் கவரினுள் கத்தையாக இருந்த பணம் ரூ.91,800/- -ற்கு உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் அந்தப்பணம் ரூ.91,800/- மற்றும் மஞ்சள் நிற பிளாஸ்டிக் கவர் மற்றும் திருமதி.சத்தியா பெயரிலான அரசு அடையாள அட்டை ஆகியவை கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது மொத்தம் பணம் ரூ.1,06,800/- மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் ஆகியவை 07.05.2025-ம் தேதி நண்பகல் 12.00 மணி முதல் 15.00 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, தூத்துக்குடி இருப்பு புதுக்கோட்டை அலுவலகத்திற்குள் இருந்த அனைவரிடமும் என்து முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது உதவி செயற்பொறியாளர் அலுவலக வருகை பதிவேடு-2025, முகாம் பதிவேடு - 2025 ஆகிய இரண்டு ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூ.1,06,800/-, மஞ்சள் நிற பிளாஸ்டிக் கவர் ஒன்று, காக்கி நிற கவர் ஒரு எண்ணம் மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து தூத்துக்குடி . ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.கார்த்திகேயன் மற்றும் தனிநபர் திருமதி.சத்தியா ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 08.05.2025, ஆ.வானமாமலை, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்கள், (இ) திருநெல்வேலி. Sir, Received the complaint on today

(08.05.2025) at 11.30 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No. 04/2025, U/s 7 of PC Act 1988 as Amended in 2018. Sd/- 08.05.2025, S.Peter Paul Durai, Dy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, ஆ.வானமாமலை அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

8.5.2025

(S. PETER PAUL DURAI)
Dy. Supdt. of Police
V&AC.
Thoothukudi Detachment